13th December 1961]

(இ) 6 (six).

(உ) 358 (excluding 5 Panchayat Unions where elections could not be conducted in view of stay orders issued by the High Court).

(எ) 1 (one).

SRI M. K. SOMASUNDARAM : இந்த பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர்களிலே ஏன் விகிதாசாரப்படி ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர்கள் மற்ற இலாக்காக்களிலிருந்து எடுக்கப்படுகிறார்கள். அதிலே விகிதாசாரத்தை அனுஷ்டிப்பது கஷ்டமாக இருக்கும்.

SRI M. K. SOMASUNDARAM : மற்ற இலாக்காக்களிலும் ஹரிஜனங்கள் நல்ல திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்களே, அவர்களை ஏன் இதற்குப் போடக்கூடாது?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கு அவர்கள் திறமையாக வேலை செய்கிறார்கள் என்று சொன்னால், அவர்களை வேறு இலாக்காக்களுக்குப் போடவேண்டிய அவசியமில்லை. இந்த இலாக்காவிற்கு யார் பொருத்தமாக இருக்கிறார்களோ அவர்களைத் தான் போடவேண்டும்.

Clerical staff of Education Department (Pay)

* 2307 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the recommendations of the Pay Commission were implemented in the case of the clerical staff of the Education department in Kanyakumari district;

(*b*) if not, the reasons therefor; and

(*c*) the difference between the pay scales of the clerical staff of the Education department of Kanyakumari district and those of the other districts?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Does not arise.

(*c*) The revised pay scales of clerical staff of Education Department in the Kanyakumari district and in the other districts are identical and do not differ.

SRI T. T. DANIEL : The present arrangement is that the management should get 20 per cent out of the fee collection. In view of the fact that we have extended fee concessions to all students whose parents earn less than Rs. 1,200 per annum, the management is not in a position to pay even the persent scale to

these clerks. Will the Government look into the matter and give some special grant to the managements for enhancing the scales of pay of these clerks?

THE HON. SRI C. SUBRAMANIAM: This question relates to clerical staff of the Education Department in Kanyakumari district. If the hon. Member is interested in the other question he has put, he may give notice of a separate question.

Presidents of Panchayat Union Councils (Election)

* 2308. *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர் தேர்தல்களில் கடும் போட்டியும், பணச் செலவும், மக்களிடையே பிளவு மனப்பான்மையும் ஏற்படுவது சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) அப்படியாயின், 1958-ம் வருஷ பஞ்சாயத்து சட்டத்தைத் திருத்தி தலைவர் தேர்தலை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) No written representation has been received by the Government.

(இ) No, Sir.

SRI S. M. ANNAMALAI: எழுத்துமூலம் புகார்கள் இல்லாவிட்டாலும், இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு நடைபெறும் தேர்தல்களிலே பலவிதத் தவறான முறைகள் கையாளப்படுகின்றன என்பதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களே சொல்லியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். பஞ்சாயத்து போர்டு தலைவர்களே பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் சேர்மனைத் தேர்ந்தெடுக்கின்ற முறை இருப்பதன் காரணமாக பலவிதத் தவறுகள் ஏற்படுகின்றன. தேர்தலுக்கு 10 அல்லது 15 நாட்களுக்கு முன்பே வோட்டர்களைத் தூக்கிச் சென்று விடுகிறார்கள். வோட்டுப் போடுவதற்கு அவர்கள் பணம் பெறுகிறார்கள். அதற்காக பல ஆயிரக்கணக்கான பணம் செலவாகிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே, தயவுசெய்து இந்த 1958-ம் வருஷ சட்டத்தைத் திருத்தி இந்த பஞ்சாயத்து போர்டு தலைவர்களால் தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றி, மக்களாலே தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதுவரையிலும் 358 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்குத் தேர்தல் நடந்திருக்கிறது. 66-ல் போட்டியில்லாமலேயே தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 240 தேர்தல்களில் "ஸ்டிரெயிட் காண்டெஸ்ட்" அடிப்படையில், அதாவது இரு அபேட்சர்களுக்குள்ளே தேர்தல் நடந்திருக்கிறது. சில தேர்தல்களிலே தவறுதல்கள் நடந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. பலவிதமான